# இந்து வேதம்

மெய்ஞ்ஞானக்கொடி

மெய்ஞ்ஞானக்கொடி

**தமிழர்களின் இந்து வேத மதமான இந்து மதம்**



## 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி
## ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார்
## அவர்கள் அருளியவை

**ஐப்பசி மாத வெளியீடு (Oct-Nov 2013)**

மெய்யான இந்துமத ஆண்டு 43,73,114

# நாடும் ஏடும் கேடு நீங்க ...
## இ.ம.இ. கொள்கை விளக்கப் பதிப்புரை

காணிக்கை ரூ.5/-

# இந்து வேதம்

பேரருட்கொடை வள்ளல், 12வது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்கள் **இந்துமதத் தந்தையாகவும், இந்துவேத நாயகமாகவும்** செயல்பட்டு எண்ணற்ற இலக்கியங்களை, இந்து வேத வாசகங்களை, இந்து வேத சூலகங்களை, இந்துமதக் கருத்துக்களை, ... அஞ்சல் வடிவக் கட்டுரைகளாகவும், தனிக் கட்டுரைகளாகவும், நூல்களாகவும் எழுதி வைத்துள்ளார். இந்துவேத நாயகத்தின் எழுத்துக்களை அனைவரும் படித்தறியும் வண்ணம் வழங்கும் இந்த வெளியீடுகளுக்கு இந்த மாதம் முதல் ***"இந்து வேதம்"*** என்று பெயர் மாற்றம் செய்யப் பட்டுள்ளது. இந்த '**இந்து**' என்ற சொல் முதல் மூன்று உகங்களில் அனைவராலும் அறியப் பட்டு ஆட்சியில் இருந்தது. ஆயினும் கலியன் உகத்தில் இந்து மதத்திற்குரிய இந்தியாவிற்குள் அன்னிய இனங்கள் வந்ததால், 'இந்து' என்ற சொல் இந்துக்களாலேயே மறக்கப் பட்டு விட்டது. அதைச் சரி செய்யும் வண்ணமே இந்துமதத் தந்தை அவர்கள் இந்துவேதத்தை எழுத்து வடிவில் வழங்கினார்.

---

# உள்ளுறை


**1. நாடும் ஏடும் கேடு நீங்க ...**

**இ.ம.இ. கொள்கை விளக்கம் பதிப்புரை**

**2 கௌரவத் தலைவர் தந்தை பெரியர் ஈ.வெ.ரா.விற்குப் பாராட்டுரை.**


— — — — — — — — — — — —

# நாடும் ஏடும் கேடு நீங்க

## இந்து மறுமலர்ச்சி இயக்கம்

## கொள்கை விளக்கம்

# பதிப்புரை

## அருளுபவர்:

ஞாலகுரு, ஞானகுரு, அரசயோகி
ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை,
பராசத்தி திருவடி, இராசிவட்ட நிறைவுடையார்,
பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி
குருமகாசன்னிதானம், இந்துவேத நாயகம்
ஞாலகுரு சித்தர் அரசயோகி கருவூரர்
இந்து மறுமலர்ச்சி இயக்கப் பாரம்பரியத் தலைவர்

## பதிப்பாளர்:

அ.நந்தகோபால்,
S/O. C.R. அருணுசலம் பிள்ளை
சோமன்துறை அஞ்சல், பொள்ளாச்சி வட்டம்,
கோவை மாவட்டம் - 642134

தமிழர்கள் கலையுணர்வும், ஆர்வமும், நாட்டமும், பயிற்சியும், முயற்சியும், தேர்ச்சியும் ... உடையவர்கள் என்பதால்தான் மூன்று பெரும் ஊழியின் அழிவுகளிலிருந்தும் தங்களின் பழம்பெரும் சங்க இலக்கியங்களில் சில துளிகளையாவது அமிழ்தம் போல் காத்துள்ளனர்.

சங்க இலக்கியங்களைத் தொகுத்துக் காக்க முற்படாமல், பல்லாயிரமாண்டு இடைவெளியில் எழுத்து, சொல், பொருள் எனும் முக்கோண

அரணுக்குள்தான் "மொழி" உள்ளது என்ற பேருண்மையின் விளக்கமாகத் 'தொல்காப்பியம்' எனும் இலக்கண நூலைக் காத்திட்டனர். இந்த இலக்கண நூலில் நடை நயம், கருத்து வளம், மேற்கோள், குறிக்கோள் ... முதலியவை இதற்கு முன் பலநூறு இலக்கண நூல்கள் இருந்திட்டன என்ற பேருண்மையினைச் சான்றுகளோடும் ஊன்றுகளோடும் மெய்ப்பிக்கின்றன. இப்பேருண்மையால் பல நூறுயிரக் கணக்கான இலக்கியங்களின் சாரமே இந்த நூற்றுக் கணக்கான இலக்கண நூல்கள் என்ற அரிய உண்மை நிறுவப்பட்டுப் பழம்பெரும் பைந்தமிழ் நூல்கள் பல்லாயிரக் கணக்கில் பிறந்தும் பாதுகாப்பின்றி மறைந்தன என்ற உண்மை நிலைநாட்டப் படுகிறது.

இதேபோல், தமிழர்கள் சமயத் துறையில் ஆர்வமும், அக்கரையும், பொறுப்பும் காட்டாததால் எண்ணற்ற கோடிச் சித்தர்களின் நூல்கள் உணரப்பட்டும் காணப்படாத நிலையை அடைந்தன. உயிரினங்களை வழிபடும் 'சொராசிட்டர் மதம்' [The Zorasterism], மானுட நல உரிமை பேணும் 'கன்பியூசிய மதம்' [The Confucism], உயிர்களிடம் அன்பு, கொலை செய்யாமை, வாய்மை பேணல் கூறும் 'புத்தர் மதம்' [The Buddhism], நல்லெண்ணம், தன்னம்பிக்கை, துணிவு செயல் கூறும் 'சமணர் மதம்' [The Jainism], தன்னைப் போல் பிறரை நோக்கும் பொதுவுடமை கூறும் 'கிறித்தவ மதம்' [The Christianity], தோழமையும், தொழுகையும், தெய்வம் அஞ்சுதலும், தளர்விலா முயற்சியும் கூறும் 'இசுலாமிய மதம்' [The Islam] முதலிய அனைத்துமே சித்தர்களின் உலகந் தழுவிய சமத்துவ சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைக்கும் சித்தாந்தத்திலிருந்தே பிறந்தன என்ற பேருண்மையை விளக்குவனவாக உலகிலுள்ள கோயில்கள் [Temples], கோயில் விஞ்ஞானங்கள் [Temple Sciences], சாத்திரச் சம்பிறதாயச் சடங்கு முறைகள் [The Religious Customs and Manners], சமயக் கொள்கைகள், கோட்பாடுகள், ஒழுகலாறுகள், நெறிகள், போக்குகள், சட்டங்கள், கட்டுப்பாடுகள், மரபுகள் [The Religious Beliefs, Faiths, Rules, Regulations, Laws and Traditions], சமய வழிபாடுகள், விழாக்கள் [Offerings, Rituals, Festivals], பழைய புராண இதிகாசங்கள் [The Holy Versions, Commandments, Vedas and Sacred Sayings] உள்ளன.

சித்தர்கள் தமிழினத்தின் வாழ்க்கை, வரலாறு, கலை, நாகரிகம், பண்பாடு, அறிவியல், சமூகவியல், அரசியல், பொருளியல், ... முதலியவைகளின் அடிப்படையில் **உலக அருளியலை** [The Universal Divinology or the Universal Mysticism and Godism] விளக்கி யுள்ளார்கள் என்ற பேருண்மையே இப்போதைக்கு வலியுறுத்திப் பொலிவுபெற விளக்கிட வேண்டிய அவசரமும் அவசியமும் ஏற்பட்டுள்ளது. அதாவது, சித்தர்கள் தமிழர்களைப் பற்றி மட்டும் கவலைப்பட வில்லை. உலகம் முழுதும் தோன்றிய எல்லா மானுட இனங்களைப் பற்றியும் கவலைப்பட்டார்கள். அந்தக் கவலையால் உருவான நற்பயனே உலக மதங்கள்.

சித்தர் நெறி 'மானுட நலம் பேணும் [The Humanism or The Human Welfare Association] இயக்கத் தத்துவமே'. இது ஓர் ஒப்பற்ற சமூகவியல் விஞ்ஞானம் [The Siddharism is the best Social Science which served for the uplift of mankind in all senses]. சித்தர்களின் படைப்புக்கள் 'மனித அறிவு வளர்ச்சிக்கும் அறவாழ்வுக்கும், அமைதிப் பண்புக்கும், உரிமைமிகு உறவுகளுக்கும் வழியாக, வழித்துணையாக, வழிப்பயனாக உள்ளவையே. "மனித இனத்தை விலங்கு நிலையிலிருந்து சமுதாயமாகக் கூடி வாழச் செய்தவை சித்தர்களின் அருள்நெறியே". [The Divine Principles and Policies of the Siddhars tamed and uplifted men to possess culture.] அதாவது "மனிதன் நீதிக் கருத்துக்களாலும் [Moral Thoughts and Thinkings] உணர்வுகளாலும்தான் திருந்திய வாழ்வைப் பெறமுடியும்" என்பதே சித்தர்நெறி. தமிழிலக்கிய இலக்கணங்கள் உணர்த்தும் சட்டம், ஒழுங்கு, கட்டுப்பாடு, கோட்பாடு, நெறிமுறை, ஒழுகலாறு, மரபு, பழக்கவழக்கம், நம்பிக்கை, நல்லெண்ணம், நீதி, நிர்வாகம், ... முதலியவை அனைத்தும் 'சமயம்' (மதம்) எனும் அருள்நெறியையே அடிப்படையாக, உள்ளீடாக, உயிர்நாடியாக, கொள்கைப் பிடிப்பாகக் கொண்டுள்ளன என்பதை உணரலாம். இது, சித்தர்களின் சாதனையே. அவர்களின் கொள்கையை விளக்கிட:-

- "மனிதன் பிறப்பிறப்பற்ற கடவுள்நிலை அடைய மற்ற மனிதனை மதித்தல், பணிதல், போற்றுதல், பேணுதல் வேண்டும்"
- "இயற்கை நெறியான இல்லறத்தில் நின்று கனிவு, இனிமை,

அன்பு, பிறர்க்குதவுதல், தோழமை காத்தல், வாய்மை பேணல், உலகத்தோடு ஒட்ட ஒழுகல் ... முதலியன செய்தலே நிறைவான நிலையான இறைமை பெறும் வழி”

- “துணிவும் பணிவும் கொடையும் அடைக்கலமும் கனிவுமிகு இனிமையும் உண்மையும் புகழுடம்பு நல்கும்”
- “துறவு [Denial of Family life] ஞானம், வீடுபேற்றை நல்க முடியாது”
- “இல்லற வாழ்வே [Family Life] (உறவே) நல்ல கல்வி, கேள்வி, தளரா வேள்வி, வாய்மை, தூய்மை, ... முதலியவற்றால் வீடுபேற்றை விளைவித்துத் தரும்”.
- “வேதாகம உபநிடத வாதைகளும் போதைகளும் கடந்து இல்லறம், அடக்கம், அறிவு, அன்பு, நட்பு, புறங்கூறுமை, நன்றி, ... எனும் பண்புநலன்களால் உயிர், ஆவி, ஆன்மா மூன்றும் முக்கோணச் சத்திபீடம் அமைத்துச் சித்திகளையும் முத்திகளையும் பெறுவதே இம் மணிதர்களுக்கு (மண்ணீசர்களுக்கு = பாட வேறுபாடு உள்ளது. மணிசர்=> மணிதர்) உரிய வழி”
- ‘அறவழி நில்’,
- ‘மறத்தோடு செயல்படு’,
- ‘நூலறிவே நுட்பம்’,
- ‘பட்டறிவே ஒட்பம்’,
- ‘குருவழியே திருவடையும் கருவழி’,
- ‘கனிவாகப் பழகு’,
- ‘இனிமையாகப் பேசு’,
- ‘உண்மை அன்புடன் உறவு கொள்’,
- ‘தூய்மை பேண்’,
- ‘வாய்மை காத்திடு’,
- ‘பிறர்க்கு உதவிடு’,
- ‘ஆற்று மக்கள் போற்றிடு’,
- ‘வேற்றுமை களைந்திடு’,
- ‘நற்றவம் ஆற்றிடு’,
- ‘பெற்றதை வளர்த்திடு’,

- ‘கற்றதைப் பயின்றிடு’,
- ‘உற்றதை விளம்பிடு’,
- ‘மறுத்ததை வெறுத்திடு’,
- ‘வந்ததை வாழ்த்திடு’,
- ‘வணங்குவதை வணங்கு’,
- ‘இணங்குவதோடு இணைந்திடு’,
- ‘இணையற்றதைத் துணையாக்கிடு’,
- ‘நன்றி பேணிடு’,
- ‘அழகு போற்றிடு’,
- ‘அன்பு ஏற்றிடு’,
- ‘அடக்கம் காத்திடு’,
- ‘ஞானம் பயிராக்கிடு’,
- ‘மெய் ஓம்பிடு’,
- ‘அனைத்தையும் சமமாகக் கருது’,
- ‘துணிவோடு செயல்படு’,
- ‘களிப்போடு பணிபுரி’,
- ‘காடு நாடாகப் பாடுபடு’,
- ‘சுவைகளை விரும்பித் துய்த்திடு’,
- ‘துன்பத்துள்ளும் இன்பமிருப்பதை உணர்ந்திடு’,
- ‘காணும் அனைத்தும் கடவுளாகிடுமென உணர்ந்திடு’,
- ‘அலை நிலைகளைக் கலையால் நிலைநிறுத்து’,
- ‘அருளால் அனைத்து இருளையும் அகற்று’,
- ‘தவத்தால் அவலங்களை அழித்திடு’,
- ‘உன்னை அழகுபடுத்தலே உலகை அழகுபடுத்தலாம்’,
- ‘உன்னை அமைதிப்படுத்தலே உலகை அமைதிப்படுத்தலாம்’,
- ‘உன்னை நிறைவுப் படுத்தலே உலகை நிறைவுப் படுத்தலாம்’,
- ‘உன்னை மகிழ்வுறுத்தலே உலகை மகிழ்வுறுத்தலாம்’,
- ‘உன்னைச் செழிப்பாக்கலே உலகைச் செழிப்பாக்குதலாம்’,
- ‘உன்னைச் செம்மைப்படுத்தலே உலகைச் செம்மைப்படுத்தலாம்’,
- ‘உன்னை நம்பி வாழுதலே உலகை நம்பி வாழுதலாம்’,

- ‘உன்னை விழிப்பாக வைத்திருத்தலே உலகை விழிப்பாக வைத்திருத்தலாம்’,
- “தன்னை யறியும் அறிவே மெய்யறிவு
பின்னை யறிவு பேயறிவு”
- “முன்னை யறிந்தால் பின்னை யறியலாம்
பின்னை யறிந்தால் தன்னை யறியலாம்”
- “தலைவனை யறியத் தன்னை யறிந்திடு
தன்னை யறியத் தலைவனை யறிந்திடு”
- “உன்னைக் கொண்டு மண்ணை விண்ணை விளங்கிடு”

... ... ... என்பன போன்ற கருத்துச் சொற்றொடர்கள் ‘குருவாசகம்’, ‘குருவாக்கு’, ‘கருவாசகம்’, ‘கருவாக்கு’, ‘திருவாசகம்’, ‘திருவாக்கு’, ‘குருபாரம்பரியம்’ ... [முதலிய நூல்களின் அருமைப்பாட்டையும் பெருமையையும் பயனையும் விளக்கும் வண்ணம் இப்பதிப்புரையில் எடுத்துக் காட்டப்படுகின்றன.] எனும் நூல்களிலிருந்து ஈண்டு எடுத்துக் காட்டப்படுகின்றன. ஏனெனில், சித்தர்கள் மிகச் சிறந்த ‘ஞானிகள்’, ‘மகான்கள்’, ‘தவசிகள்’, ‘அருளாளர்கள்’, ‘தத்துவவாதிகள்’, ... என்ற கருத்தோட்டமே அனைவரிடமும் உள்ளது. **சித்தர்கள் மிகச் சிறந்த மொழிப்புலமையாளர்கள், இலக்கியவாதிகள், சிந்தனையாளர்கள், சீர்திருத்தவாதிகள், பகுத்தறிவுவாதிகள், விஞ்ஞானிகள், அரசியல்மேதைகள், சமுதாயச் சிற்பிகள், பேரறிஞர்கள், உலகியலுணர்ந்த மெய்ஞ்ஞானிகள், ... என்ற கருத்தோட்டம் எல்லா மட்டத்தாருக்கும் உருவாக வேண்டும்.** அப்பொழுதுதான் சித்தர்நெறி வளர்ச்சியுற்று இந்து மறுமலர்ச்சி இயக்கம் வெற்றி பெற்றிடும்.

சித்தர்களின் நூல்கள், **‘தமிழர்கள் வரலாறு எழுதி வைக்கவில்லை’** என்ற மாபெரும் குறையை முழுமையாக அகற்றி நிறைவு செய்யும் பேராற்றலுடையவை என்பதை இப்பதிப்புரையில் வலியுறுத்திக் கூற விரும்புகிறேன். ஏனெனில், தமிழ் வாழ்க! தமிழினம் வெல்க! தமிழ்நாடு உயர்க! ... என்ற முழக்கமும் உணர்வும் அரசியல்வாதிகளால் குளிர் காய்வதற்குப் பயன்படுத்தப்பட்டு எரிந்து சாம்பலாகிவிட்டன. அவை, தழைக்க உழைக்க சித்தர்களின் சாதனைப்பட்டியலே சிறந்த வழி ...

சித்தர்கள் காலம், இம்மண்ணுலகுக்கும் முந்திய ஒன்றுகும். அதாவது, 'விண்வெளியில் உள்ள சூரியனின் சிதைவு நெருப்புக் கோளமாகச் சுழன்று, பனிக்கட்டியாக, நீராக மாறிப் பின் நிலங்கள் தோன்றிப் பயிரினங்களும் உயிரினங்களும் பிறந்தன ...' என்ற இம்மண்ணுலக வாழ்க்கை வரலாற்றையே (The Life History of the Earth) எழுதும் மூத்தவர்கள்தான் பதினெண்சித்தர்கள். இவர்கள், விண்வெளியில் உள்ள பல அண்டங்களிலும் வாழுபவர்கள். இவர்கள் சிறந்த வானவெளி ஆய்வுப் பயண வீரர்கள் [Astronauts]. எனவே, இவர்களேயும், இவர்களின் அறிவியல் சாதனேகளேயும், அருளுலகக் கொடைகளேயும் விவரித்தல் எளிதல்ல. காலமும் கருத்தும் அறிவும் ... மிகக் குறைவாகவே இருப்பதால்; **'சித்தர்களின் கடந்த மூன்று நூற்றுண்டுச் சிந்தனேகளே'** [The Last Three Centuries' Thoughts of the Siddhars] மட்டும் விவரிப்பதே நல்லது.

**'இந்து மறுமலர்ச்சி இயக்கம்'** என்ற ஒன்றைக் கி.பி.1772இல் உருவாக்கிய எனது தாய்வழித் தாத்தா சித்தர் ஏளனம்பட்டியார் அவர்களேயே ஆரம்பமாகக் கொண்டு 18, 19, 20ஆம் நூற்றுண்டுகளில் சித்தர்கள் வளர்த்த சிந்தனேகளே ஆராயலாம்.

**"இந்தியாவுக்கு வந்திருக்கும் கிறித்தவம், முகம்மதியம் எனும் இருபெரும் சமயங்களும் சித்தர்நெறி (இந்துமதம்) எனும் மழையால் பிறந்த ஆறுகளே!** இவை சித்தர்நெறி வாழும், ஆளும் இந்திய மக்களுக்குப் புதியவையல்ல, மாறுனவையல்ல, வேறுனவையல்ல. இப்பேருண்மையினேப் புரிந்தும் பிருமணர்கள் இவற்றேடு சண்டை, சச்சரவு, போட்டி, போர், ... முதலியவைகளே வளர்த்தே வருகின்றனர். இதனுல், இவர்கள் தங்களுக்கென ஓர் உயர்ந்த தலேமைப் பீடத்தைக் கருவாக்கிக் காத்து வளர்க்கிறுர்கள். இது தவறு, கண்டிக்கத் தக்கது. பிருமணர்கள் திருந்த வேண்டும். அப்பொழுதுதான் கிறித்தவமும் முகம்மதியமும் இந்தியம் எனப்படும் சித்தர்நெறியில் [இன்றைய இந்துமதம்] இரண்டறக் கலந்து விடும். இதற்காகத்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கம் தோற்றுவிக்கப்படுகிறது. இது, பிருமணரை எதிர்க்கவோ, அழிக்கவோ ஏற்படுத்தப்படவில்லே. சித்தர்கள், இம்மண்ணுலக இனத்தார் அனேவரையும் சமமாகக் கருதும் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் அமைத்தவர்களேயாம்.

பிருமணர்கள், வித்தை காட்டுபவர்கள் யானை, புலி, கரடி, சிங்கம் ... முதலியவைகளை முக்கால் பட்டினி போட்டு வலிமை குன்றச் செய்து தங்களுக்கு அடிமையாக்கி ஏவல் செய்விப்பது போல்; இந்துமதத்தைப் பல சாதிப் பிரிவுகளால், ஏற்றத் தாழ்வுகளால், வேறுபாடுகளால், முரண்பாடுகளால், தீண்டாமைகளால் சித்திரவதை செய்து, பட்டினி போட்டு அடக்கி ஒடுக்கித் தங்கள் விருப்பப்படி வித்தை செய்யும் ஒன்றாக ஆக்கி விடுகிறார்கள் (பிருமணர்கள்). அதாவது, சித்தர்களின் தத்துவச் செழிப்பும், செயல்முறை வளமும், சாத்திற வலிமையும் முழுமையாக மூடிமறைக்கப் பட்டு ஆரியக் கற்பனைகளும், கதைகளும், சடங்குகளும், சட்டங்களும், வேதங்களும், ... இந்துமதத்தைச் செழிப்பற்றதாக, வளமற்றதாக, வலிமையற்றதாக, மெலிவுற்றதாக, நலிவுற்றதாக, கேலிக்குரியதாக ... ஆக்கி வைத்திருக்கின்றன. அதனால், இந்துமதம் தாய்ப்பாலில்லாத நோஞ்சான் குழந்தையாக, பிறர் உதவியின்றி நடக்கமுடியாத ‘இளம்பிள்ளைவாத நோயால் பாதிக்கப்பட்ட’ குழந்தையாக இருக்கின்றது. எனவே, பிச்சைக்காரர்கள் பிச்சையெடுக்க நோயாளிக் குழந்தைகளைப் பயன்படுத்துவதுபோல், பிருமணர்கள் சித்தர்நெறி எனும் நல்ல திடமான குழந்தையை நோயாளியாக்கி (இந்துமதம்) தாங்கள் வாழ்வதற்கும், மேலாண்மை செய்வதற்கும் பயன்படுத்தி வருகிறார்கள். **இவர்கள் திருந்த வேண்டும்; ஆனால், இவர்களைத் திருத்தவே முடியாது.** ஏனெனில், இவர்கள் மிகமிகக் கட்டுப்பாடும், முன்னெச்சரிக்கையும், விழிப்பும், நாட்டுநடப்பில் ஆதிக்கமும், அப்பாவி மதவாதிகளிடம் மிகுந்த செல்வாக்கும், உடலுழைப்பின்றி அறிவுழைப்பை மட்டுமே நம்பி வாழும் வாழ்வும் உடையவர்களாக இருக்கிறார்கள். அதனால், இவர்கள், தங்களுடைய வாழ்வுக்குக் கருவியாக இருக்கும் மடமை மிகுந்த இந்துமதப் பகுதிகளை யார் சீர்திருத்த முற்பட்டாலும் அவர்களை ‘மத விரோதிகள்’, ‘நாத்திகர்கள்’, ‘சமுதாயத் துரோகிகள்’ ... என்று மிக எளிதில் பழி சுமத்தி அழித்தொழித்து விடுகிறார்கள். இதற்காகவே **இந்துமதம்** என்ற சொல்லைப் பயன்படுத்தாமல் ‘இந்து’ என்ற சொல்லை மட்டும் பயன்படுத்தி; ‘இந்து மறுமலர்ச்சி இயக்கம்’ என்ற ஒன்று தோற்றுவிக்கப் படுகிறது. இந்த இயக்கம் பல நூற்றாண்டுக் காலம் வாழ்ந்தால்தான் இந்திய மக்களைத் தங்களுடைய நல்வாழ்வுக்கு உரிய ஒன்றாக இந்து மதத்தைப் பயன்படுத்திக் கொள்ளும்படி

செய்ய முடியும். அதற்காகத்தான், இந்த இயக்கத்துக்குக் குருதி வண்ணச் சிவப்புத் துணியில் கருப்பு வண்ண இலிங்கம் மூன்று திருநீற்றுப் பட்டையும் ஒரு குங்குமப் பொட்டும் அணிந்த நிலையை உடைய ‘ஞானக்கொடி’ வழங்கப் பட்டிருக்கிறது. இக்கொடியின் கீழ் அருளாளர்கள் ஒன்று திரண்டு பயிற்சி பெற்றுப் பின் திட்டமிட்டுச் செயலில் இறங்க வேண்டும். இல்லாவிட்டால், கடந்த இரண்டாயிரம், மூவாயிரம் ஆண்டுகளில் இந்து மதத்தை மக்களின் அமைதியை, ஒற்றுமையை, சமத்துவத்தை, சகோதரத் தத்துவத்தை, சமாதானப் பண்பை, உறவுமுறையைப் பாழ்படுத்திக் கீழ்மைப் படுத்திடப் பயன்படுத்திய பிறாமணர்கள் இந்த இயக்கத்தையும் அழித்திடுவர்.

‘பிறமண்ணினர்’ என்ற சொல்லால் குறிக்கப் படும் அன்னியர்களே ‘பிறாமணர்கள்’. இவர்கள் இந்திய மக்கள் பல சாதிகளாகப் பிரிந்து ஒருவருக்கொருவர் ஏற்றத் தாழ்வும், வேறுபாடும், போட்டியும், பொறாமையும், தீண்டாமைக் கொடுமையும் வளர்த்துக் கொண்டு ஒற்றுமையின்றிச் சண்டை போட்டுக் கொண்டே இருந்தால்தான் தாங்கள் வாழமுடியும் என்பதை உணர்ந்தவர்கள். எனவே, இவர்களைத் திருத்த முற்படுவதை விடச் சாதிப் பிரிவுகளை அழித்தொழித்து அனைவரையும் சமம் என்றாக்கிடலே செய்யவேண்டிய செயல். திருமண உறவு எல்லாச் சாதிகளுக்குள்ளும் கலந்து எதார்த்தமாக நடக்கும்படிச் செய்திட்டால் போதும். எல்லாச் சாதி வேறுபாடுகளும், ஏற்றத்தாழ்வுகளும், தீண்டாமைகளும் இல்லாமல் செய்திட்டால் போதும். அதுவே, இந்துமதத்தை மறுமலர்ச்சியும், வளர்ச்சியும், பயனும் பெறுமாறு செய்திடும். ஏனெனில், சரியாகவோ தவறாகவோ பிறாமணர்கள் இந்துமதத்தில் ஆதிக்கம் செலுத்துகிறார்கள். அவர்கள், பிறர் அறியாத சமசுக்கிருத மொழியில் வேதம், சாத்திரம், ஆகமம், உபநிடதம், அர்ச்சனை மந்திரம் ... முதலியவைகளை வைத்துக் கொண்டு யாரும் எந்தப் புதுக் கருத்தும், திருத்தமும் இந்துமதத்தில் செய்துவிடாதபடி தடுக்கிறார்கள்.



மெய்ஞ்ஞானக்கொடி

எனவே, இவர்களைச் சீர்திருத்த இயலாது, முடியாது, வீண்முயற்சி. இவர்களை, எதிர்க்காமல் இந்துமதச் சீர்திருத்தம் செய்ய வேண்டும். அதற்காக, அறுபத்துநான்கு ஆயகலைகள், நாற்பத்தெட்டு அருட்கலைகள், ஒன்பது கடவுட்கலைகள், ஒன்பது தெய்வீகக் கலைகள், ஒன்பது பேய்க்கலைகள், ஒன்பது நோய்க்கலைகள், ஒன்பது தேய்கலைகள், சாத்திற தோத்திறங்கள், சாத்திர தோத்திரங்கள், சாத்தர தோத்தரங்கள் - நிடதங்கள், இணைநிடதங்கள், துணைநிடதங்கள், ஆகமங்கள், மீமாம்சைகள், நான்மறைகள், நான்முறைகள், நானெறிகள், நான்வேதங்கள், நாதங்கள், ஓதங்கள், ஓகங்கள், ஓமங்கள், யாகங்கள், யக்ஞங்கள், வேள்விகள், தவங்கள், ஞானங்கள், பூசைகள், வாக்குகள், வாசகங்கள், சூத்திறங்கள், சூத்திரங்கள், சூத்தரங்கள் ... முதலிய சித்தர்நெறிக் கலைகளைப் பயன்படுத்தி எல்லாச் சாதிகளிலும் அருளாளர்களை உருவாக்கிடல் வேண்டும். அந்த அருளாளர்கள் ஆங்காங்கே செயல்பட்டு நோய்களையும், பேய்களையும், கோள்களையும், நாள்களையும், மீன்களையும், இராசிகளையும் ... வென்று மக்களுக்கு நற்பணி செய்திட்டால் போதும். அவற்றால், மக்கள் சித்தர்நெறி காட்டும் அருள்வழியை, அன்புவழியை, சமத்துவ வழியை, சகோதரத் தத்துவ வழியை, சமாதான வழியை, அறவழியை ... உணர்ந்து, புரிந்து ஏற்றிடுவர். அதன்பிறகு, பிருமணர்கள் இந்துமதத்தைப் புனிதப்படுத்த, இனிமைப்படுத்த, ... உதவுவார்கள். எனவே, **இந்து மறுமலர்ச்சி இயக்கம் எக்காரணத்தை முன்னிட்டும் பிருமண மறுப்புடனோ, வெறுப்புடனோ, எதிர்ப்புடனோ செயல்பட்டு விடக் கூடாது**. பிருமணர்கள், பல காலக்கட்டங்களில் வெட்டப்போகும் பலியாட்டை நன்கு பசிய தழைகள் போட்டு ஊட்டி வளர்ப்பதுபோல் இந்து மதத்தை வாஞ்சையோடு வளர்த்து வந்திருக்கிறார்கள் என்பதை எண்ணியாவது பிருமண எதிர்ப்புணர்வை வித்திட்டு வளர்க்காமல் இருக்க வேண்டும். இதை உணராமல் இந்து மதச் சீர்திருத்தத்தில் இறங்குபவர்கள் ஆற்றின் போக்கை எதிர்த்து நீந்த முற்பட்டுக் காலத்தையும் முயற்சியையும் வீணாக்கியவர்களாகவே ஆகிடுவார்கள். எனவே, சில நூற்றாண்டுகள் இலைமறை காயாகவே இந்து மறுமலர்ச்சி இயக்கம் வளர்ச்சி பெறுவதுதான் நல்லது.

இன்றைய இந்துமதத்தில் உள்ள பீடங்களோ! சன்னிதானங்களோ! பண்டாரங்களோ! குருமார்களோ! பூசாறிகளோ! மடத்தலைவர்களோ! சித்தியார்களோ! ... பொதுமக்களிடையில் கூட்டம் போட்டுக் கொள்கை விளக்கம் பேசத் தயாராக இருக்கிறார்களா? ... இல்லை! இருக்க முடியாது! ... ஏனெனில், யாரும் காலவேகத்தையும், கருத்து மாற்றங்களையும், வளர்ந்து வந்துள்ள தேவைகளையும் புரிய முயற்சிக்கவில்லை. அப்படியே ஒருசிலர் உலகியல் அநுபவங்களால் புதிய சூழலுக்கேற்ற புரட்சியுணர்வு பெற்றிருந்தாலும் அதைத் துணிந்து மக்களிடையில் கூறும் நிலையில் இல்லை. எனவே, இந்து மறுமலர்ச்சி இயக்கம் பொதுமக்களைச் சந்தித்துக் கூட்டங்கள் போட்டு மனித வாழ்வில் ஒற்றுமையும், உறவுப் பசுமையும், சமாதான வளமும், சமத்துவச் செழிப்பும், சகோதரத் தத்துவ வலிமையும், பிரிவு மனப்பான்மைக்கு நலிவும், வேற்றுமைக்கும் ஏற்றத்தாழ்வுக்கும் அழிவும் ... உருவாக்கக் கூடிய ஒரே ஒரு சாதனம் **'சித்தர்நெறி'யே இந்துமதம் = இந்தியம் = இந்திய அகப்பண்பாடும், புறநாகரிகமும்** என்ற பேருண்மையை விளக்க வேண்டும். அதாவது, இந்து மறுமலர்ச்சி இயக்கம் உருவாக்கும் அருளாளர்கள் ஏட்டறிவும், பட்டறிவும், திட்டமிட்டுச் செயல்படும் நுட்பமும் பெற்றுப் பொதுமக்களைச் சந்தித்து **'மதமே மனிதவாழ்வை நலப்படுத்தும், வளப்படுத்தும், வலிமைப்படுத்தும், பொலிவுறச் செய்யும்'** என்ற சித்தர்நெறிச் சித்தாந்தத்தை விளக்கியுரைத்து அனைவரையும் சமாதான வழியில் புரட்சி செய்து புதுமைச் சமுதாயம் அமைக்கும் பணியில் ஈடுபடச் செய்ய வேண்டும். இதை விட்டுவிட்டு இந்து மதத்துக்குள் சாதிச்சண்டைகளையும், மற்ற மதங்களுடன் போராட்டங்களையும், போர்களையும், ... வளர்த்துச் சமுதாய அமைதி, மகிழ்ச்சி, நிம்மதி, நிறைவு, அறம், அன்பு, ஒற்றுமை, நல்லுறவு, நட்பு, தோழமை, சகோதரத் தத்துவம், ... முதலியவைகளை அழித்து வரும் மதவாதிகளின் குறுகிய கண்ணோட்டமும், வெறியும், தன்னலமும், சூழ்ச்சியும், சதியும் ... முழுமையாகத் தடுக்கப்பட்டு அகற்றப்பட்டேயாக வேண்டும். இதுதான் இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் உயிர்நாடியான கொள்கையும், குறிக்கோளும் ஆகும்..."

இத்துடன் விரிவஞ்சிச் சித்தர் ஏளனம்பட்டியார் கி.பி.1772இல் **வழங்கியதாகக்** கிடைத்துள்ள வாசகங்களில் ஒரு சிறு பகுதியைப் பதிப்புரையில் குறித்திடும் முயற்சியை நிறைவு செய்கிறேன்.

இன்றைய இந்தியத் துணைக்கண்டத்தில் தனிமனித வாழ்வு, குடும்ப வாழ்வு, சமுதாய வாழ்வு, அரசியல் வாழ்வு ... முதலிய அனைத்திலும் தேக்கநிலைகள், தூக்கநிலைகள், ஏக்கநிலைகள், ஏமாற்றநிலைகள், எரிச்சல்நிலைகள், செயற்கையான பற்றுக்குறைநிலைகள், எதேச்சாதிகாரநிலைகள், முறைகேடுகள், சுரண்டல்கள், வறட்டுத் தத்துவங்கள், முரட்டுச் செயல்கள் ... மிகுந்திருக்கின்றன. இவற்றைத் தெரிந்து மனதுக்குள் புழுங்குபவர்களும்; வாய்க்குள் ஒலியடங்கப் புலம்புபவர்களும்; வாய்விட்டு அரற்றிடுபவர்களும்; குறைகூறி வாய்ப்பேச்சுப் பேசித் திரிபவர்களும்; ஏதாவது செய்யவேண்டுமென்று கூறித் துடிதுடித்துத் திரிபவர்களும்; சட்டத்தையே தங்கள் கையில் எடுத்துக் கொண்டு நாசவேலையில் இறங்கும் நக்சலைட்டுகளும், தீவிரவாதிகளும்; தான்மட்டும் வாழ்ந்தால் போதுமென்று கூனிக்குறுகிக் கும்பிட்டு வாழ்பவர்களும்; ‘இராமன் ஆண்டால் என்ன? இராவணன் ஆண்டால் என்ன?’ ... என்று அப்பாவிக் கோழையாக வாழுபவர்களும்; ‘நமக்கேன் இந்த வம்பு’ என்று கோழையாக வாழுபவர்களும்; ‘அதெல்லாம் நம்மால் முடியாது’ ... என்று தன்னம்பிக்கையிழந்து வாழுபவர்களும்; ‘எல்லாம் தலையெழுத்துப்படி நடக்கும்’ ... என்று கூறிச் செயலற்று வாழும் மடமைவாதிகளும், ‘யாராலும் இவற்றை மாற்ற முடியாது’ ... என்று கூறிப் பொறுப்பற்று வாழும் சோம்பேறிகளும்; ஏதாவது ஒரு காரணத்தைக் கூறி ‘இதைவிடச் சிறப்பாக வேறு யாரும் ஆள முடியாது’ ... என்று கூறித் திரியும் ஆளுங்கட்சியினரும்; ‘அடுத்த தேர்தல் வந்து அதில் ஆளுங்கட்சி மாறினால்தான் ஏதாவது நன்மை ஏற்படும்’ ... என்று கூறித் திரியும் அரசியல் வியாதியாளர்களும்; எதைப்பற்றியும் கவலைப்படாமல் ‘எரிகிற வீட்டில் எடுத்தது இலாபம்’ என்று கள்ளச் சந்தையும், கொள்ளையும், ஊழலும் செய்யும் சுயநலக் காரர்களும்; எவ்விதக் கவலையுமில்லாமல் பொழுது போக்கித் திரியும் மக்களும் ... மிகுந்திருக்கின்றனர். இப்படிப்பட்ட காலக்கட்டத்தில்தான் இந்து மறுமலர்ச்சி இயக்கம் வெளிக் கிளம்பிப் பொதுமக்களைச் சந்தித்துக் கொள்கை விளக்கம், குறிக்கோள், செயல்திட்டம், ... முதலியவைகளைப் பேசிச் செயலில் இறங்க வேண்டும்.

இம்முடிவு, இந்தியப் பண்பாட்டுப் பாரம்பரியங்களையும், நாகரீகக் கூறுபாடுகளையும், சமுதாய மரபுகளையும், சமயக் கோட்பாடுகளையும்,

தொன்மைமிகு தத்துவச் சித்தாந்தங்களையும் ... சிதையாமல், சீரழியாமல் ... கட்டிக் காப்பதற்காகவே எடுக்கப் பட்டுள்ளது. இம்முடிவால், எல்லா மதங்களையும் ஒருங்கிணைத்து 'உலக ஆன்மநேய ஒருமைப்பாடும்', 'உலகமத ஒருமைப்பாடும்', 'உலகச் சமாதானமும்', 'உலகச் சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயமும்', ... உருவாக்கப்படும். இதுவே, இம்முடிவின் கொள்கையும், குறிக்கோளும், நோக்கும், போக்கும், ஊக்கும், ஆக்கத் திட்டமும் ஆகும். எனவே, இந்து மறுமலர்ச்சி இயக்கம் முழுக்க முழுக்க ஒரு பண்பாட்டு இயக்கமாக [A Cultural Organization] இருந்திடும். இது, இந்தியத் துணைக்கண்டத்தில் சித்தர்நெறியின் மூலம் அமைதி, ஒற்றுமை, சமாதானம், சமத்துவம், அறம், அன்பு, அருள், கூட்டுறவு, நல்குரவு ... முதலியவைகளைச் செழித்தோங்கச் செய்யும். அதன் அடிப்படையிலேயே உலகம் முழுதும் சித்தர்நெறியைப் பரப்பும். அதாவது, 'சித்தர் நெறியின் மூலம்தான் சமுதாய மாற்றம் [Social Change] செய்யமுடியும்' ... என்ற பேருண்மையைச் செயல்வடிவில் மெய்ப்பித்து நிலைநாட்டுவதே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கடமை.

'இந்து' என்ற சொல் 'இந்தியம்' எனும் சொல்லின் சுருக்கமே. 'இந்தியம்' என்ற சொல் இந்தியாவின் பூர்வீகக் குடிகளான தமிழர்கள் வளர்த்த பண்பாடு, நாகரிகம், மரபு, ஒழுகலாறு, நெறிமுறை ... முதலியவைகளையே குறிக்கும். இவை, எழுதப்பட்ட இலக்கியங்களில் மட்டும் இல்லை. அதாவது, 'எழுதாக் கிளவிகளாக' உள்ள எழுதப்படாத இலக்கியங்களிலேயே இவை மிகுதியாக உள்ளன. எனவே, 'இந்தியம் என்றால் என்ன?' என்ற ஆய்வை இன்று கிடைக்கும் புத்தகங்களுக்குள் மட்டும் தேடிடும் முயற்சியில் எவரும் ஈடுபடல் வேண்டாம்.

இன்றைக்கு உலக அளவில் இலக்கியத் துறையில் மிகப் பெரிய பெரிய ஆய்வுகள் நிகழுகின்றன. ஆனால், மனிதன் தோன்றி எவ்வளவு காலம் ஆகிறது? அவன் வாழக் கற்றுக் கொள்ள எவ்வளவு காலம் ஆயிற்று? அவன், மொழியை உருவாக்க எவ்வளவு காலம் பாடுபட்டான்? பேச்சு மொழி எப்படிப் பிறந்தது? எழுத்து மொழி எவ்வளவு காலம் முயன்று உருவாக்கப் பட்டது? இவ்வுலகில் தோன்றிய முதல் மொழி எது? அல்லது, முதல் மொழிகள் யாவை? மொழியினடிப்படையில்

இனம், நாடு என்ற பிரிவு கணிக்கப்படுவது சரியா? நாடு என்ற எல்லையை உருவாக்கிக் கொண்டு பல மொழிகளைப் புறக்கணித்து ஒருமொழியை மட்டும் ஆட்சிமொழியாக்குவது சரியா? மதத் துறையில் குறிப்பிட்ட மொழிகள் மட்டும் ஆட்சி செய்வது சரியா? தவறு? ... என்ற பயனுள்ள ஆராய்ச்சிகளை ஏறத்தாழ எந்த இலக்கியவாதியும் [Men of Literature] செய்யவில்லை, செய்யத் தயாராக இல்லை, செய்யத் தெரியவில்லை, செய்ய இயலாது, செய்வது அரிது ... .

எனவேதான், இந்து மறுமலர்ச்சி இயக்கம் இரண்டு நூற்றாண்டு கால வளர்ச்சியின் அடிப்படையில் தமிழகம், தமிழினம், தமிழ்மொழி என்ற முக்கோண வயலில் நாற்றங்கால் உருவாக்கிச் சித்தர்களின் தத்துவ வித்துக்களின் நாற்றுக்களைத் தயாரித்து இந்தியத் துணைக்கண்டம் முழுதும் நட்டுப் பயிராக்கி நல்ல விளைச்சலை உலகுக்குக் காட்ட முற்பட்டிருக்கிறது. இதன்மூலம், சித்தர்களின் தத்துவம் [The Siddharism] உலகம் முழுதும் விரும்பி ஏற்றுப் பயிர் செய்யப்படும் நற்காலம் உருவாக்கப்படும். அதுவே, மானுட இனத்தின் பொற்காலம். இதற்காக உலக இலக்கியப் பரப்பில் **‘சித்தர்களின் இலக்கியக் கொள்கை’** [The Siddhars’ Literary Principles] பற்றிய ஆய்வு ஒன்று ஆழமாகவும் அகலமாகவும் நிகழ்த்தப்பட்டேயாக வேண்டும். ஏனெனில், ஏறத்தாழ இவ்வுலகில் தோன்றிய எல்லா மதங்களும் சித்தர்களின் இலக்கியங்களின் அடிப்படையில்தான் பிறந்திருக்கின்றன. அதாவது, ‘மதம்’ என்றாலேயே ‘சித்தர் நெறி’ [Religion Means The Siddharism] என்று பொருள் கூறுவதுதான் சரியாகும்.

இன்றைய இலக்கிய உலகில்,

1. எதார்த்தவாதம் [Realism]
2. சமுதாய எதார்த்தவாதம் [Socialist Realism]
3. பகுத்தறிவுவாதம் [Rationalism]
4. மிகை எதார்த்தவாதம் [Surrealism]
5. விளக்கியல் எதார்த்தவாதம் [Critical Realism]
6. இயற்பியல் வாதம் [Naturalism]
7. துய்ப்புணர்வு வாதம் [Pragmatism]

8. (கற்பனைத்) தோற்றவியல் வாதம் [Imaginarism]
9. அழகுணர்வு வாதம் [Aestheticism]
10. தன்னுணர்வு வாதம் [Stream of Consciousness]
11. (இருப்பியல்) நிலையியல்வாதம் [Existentialism]
12. வடிவ இயல் வாதம் [Formalism]
13. தனிநபர் வாதம் [Individualism]
14. அடையாளவியல் வாதம் [Symbolism]
15. கருத்து முதல்வாதம் [Idealism]
16. பொருள்முதல் வாதம் [Materialism]
17. வரலாற்றுப் பொருள்முதல் வாதம் [Historical Materialism]
18. இயக்க இயல் பொருள்முதல் வாதம் [Dialectical Materialism]
19. விளக்கமற்ற வறண்ட முரட்டுவாதம் [Obscurantism]
20. தொல்காப்பியர் தத்துவம் [Tholkaappiarism]
21. திருவள்ளுவர் தத்துவம் [Thiru Valluvarism]
22. சாக்கிரடீசு தத்துவம் [Socratesism]
23. பிளேட்டோ தத்துவம் [Platoism]
24. சொராசிட்டர் தத்துவம் [Zorasterism]
25. கன்பியூசியசு தத்துவம் [Confucianism]
26. மகாவீரர் தத்துவம் [Maha Veerarism]
27. புத்தர் தத்துவம் [Buddharism]
28. நாயன்மார் தத்துவம் [Naayanmaarism]
29. ஆழ்வார் தத்துவம் [Aazhvaarism]
30. இயேசு தத்துவம் [Jesusism]
31. சங்கராச்சாரியார் தத்துவம் [Sankararism]
32. இராமானுஞ்சாச்சாரியார் தத்துவம் [Ramanunjaachaariyaarism]
33. மாத்வாச்சாரியார் தத்துவம் [Maadhvarism]
34. முகம்மது நபி சல்லின் தத்துவம் [Mohammadenism]

35. சந்தானக் குரவர் தத்துவம் [Santhaana Kuravarism]
36. வால்ட்டேர் தத்துவம் [Voltairism]
37. ரூசோ தத்துவம் [Rusoeism]
38. ஏக்கல் தத்துவம் [Heggalism]
39. மார்க்சீயத் தத்துவம் [Marxism]
40. பொதுவுடமைத் தத்துவம் [Communism]
41. இலெனின் தத்துவம் [Leninism]
42. மாவோ தத்துவம் [Maoism]
43. காந்தீயத் தத்துவம் [Gandhism]

... ... என்றிப்படி எண்ணற்ற **'இலக்கிய வகைகளை'**ப் [Different Types or Varieties of Literature] பட்டியலிட்டுக் காட்டுமளவுக்கு இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் [Research Scholars of Literature] கடுமையாக உழைத்து வருகிறார்கள்.

ஆனால், யாருமே இந்த எண்ணற்ற இலக்கிய வகைகளுக்கு எல்லாம் ஒரு தாய்த் தத்துவ இலக்கியமாகச் சித்தர்நெறி [The Siddharism] இருப்பதைக் கண்டுபிடிக்க முடியாமல் தடுமாறிக் கொண்டே இருக்கின்றார்கள். இதற்குக் காரணம் தெய்வீக அநுபவங்களை [Divine Experiences] நேரடியாகத் துய்க்காதவர்களும்; துய்த்தவர்களில் மயக்கம் தெளியாதவர்களுமே பெரும்பாலும் இலக்கிய ஆராய்ச்சியாளர்களாக இருக்கிறார்கள். மேலும், சிறுபான்மை இலக்கிய ஆராய்ச்சியாளர்கள் வறட்டுத் தத்துவவாதிகளாக, மதமறுப்பாளர்களாக, மதவெறுப்பாளர்களாக, நாத்திகர்களாக, ... இருக்கிறார்கள். எனவேதான், "யாராலும் 'உலகந் தழுவிய இலக்கியக் கொள்கை' [The Universal Literary Principle, Philosophy and Policy] ஒன்று இருக்கிறது என்ற பேருண்மையினைக் கண்டுபிடிக்கவே முடியவில்லை" என்று என் தந்தை 'சித்தர் காகபுசுண்டர் பழநிச்சாமி' அவர்கள் மிகத் தெளிவாகவும் நேரடியாகவும் அடிக்கடி கூறியும் எழுதியும் வந்துள்ளார். இவர் ஒரு மிகப்பெரிய மார்க்சீயச் சிந்தனையாளராக, பொதுவுடமைத் தத்துவப் பேரறிஞராக, உலக இலக்கிய மேதையாக, பகுத்தறிவு இயக்கச் சிற்பியாக, புரட்சி மாவீரராக, அரசியல் வித்தகராக, ... வாழ்ந்திட்டவர்.

இவர், வறட்டு நாத்திகராாக வாழாமல் நல்ல நடுநிலைச் சிந்தனையாளராக, ஆராய்ச்சியாளராக வாழ்ந்ததால்தான் என்னுடைய அருளுலகச் சாதனைகளை ஒப்புக் கொண்டு நாத்திக இருளை விட்டு வெளியே வந்தார்.

இவரைப் போல் எண்ணற்ற 'மனச்சாட்சி மாந்தர்களை' [Men of Self-Conscience] அருளுலகுக்கு அழைக்க வேண்டுமேயானால் இந்து மறுமலர்ச்சி இயக்கம் விரைந்தும் விரிந்தும் செழுமையான வளர்ச்சியினைப் பெறவேண்டும். அதற்கு, இந்த இயக்கம் 'சித்தர்நெறி' எனும் ஒரு மாபெரும் தத்துவத்தை அடிப்படையாகக் கொண்டிருக்கிறது என்ற பேருண்மை நன்கு, வெளிப்படையாக, எளிதில் அனைவரும் தெரிந்து, புரிந்து, உணரும்படி செய்ய வேண்டும். அதற்காகப் பழம்பெரும் சித்தர் நூல்களும்; யாம் எழுதியுள்ள நூற்றுக்கணக்கான நூல்களும், ஆயிரக்கணக்கான கட்டுரைகளும், நூறுயிரக் கணக்கான அஞ்சல்களும், ஆராய்ச்சிக் குறிப்புகளும் அச்சேறி வெளிவர வேண்டும். அக்காலம், எக்காலமோ என்று எண்ணி ஏங்கிக் காத்திராமல் எமது நூற்றுக்கணக்கான அடியான்களையும், அடியாள்களையும், அடியார்களையும் அவரவர் ஓய்வு, வாய்ப்பு, வசதிகளுக்கேற்ப எமது படைப்புக்களுக்கு நகல் எழுதச் சொல்லிக் கையெழுத்துப் புத்தகப் புரட்சி [The Revolution of The Manuscript Magazines] நிகழ்த்தி வருகிறேன். அது மாபெரும் வெற்றியினைத் தந்து வருகின்றது.

'ஞானபூமி' என்ற புகழுக்கும், உரிமைக்கும், பெருமைக்கும் உரிய இந்தியத் துணைக்கண்டத்து நல்வாழ்வுக்காக வெளிநாட்டிலிருந்து சமயத் தத்துவங்கள், சமூகத் தத்துவங்கள், அரசியல் தத்துவங்கள் ... பல இறக்குமதியாகி விட்டன. ஆனால், எதுவும் பெரும்பாலான மக்களின் ஆதரவைப் பெற்று 'முழுமையான புரட்சியை' [Total Revolution] உருவாக்கவே முடியவில்லை. இதனைப் புரிந்து கொண்டு செயல்படக் கூடிய தலைவர்களே தோன்றவில்லை. எனவேதான், மேனாட்டுத் தத்துவ ஞானிகளின் தத்துவங்களை மனப்பாடம் செய்து மேடைகளில் ஒப்புவித்துக் கொண்டும்; சிறுசிறு இலக்கியச் சிதறல்களின் துணுக்குகளாகவும்; மேற்கோள்களாகவும் குறித்து உழறிப் புரட்சிப் பணியைக் கேலிக் கூத்தாக்கி வருகிறார்கள். இனியும், இக் கேலிக்கூத்துத் தொடரக் கூடாது; இக் கேலிக்கூத்தால் வரக்கூடிய தீமைகளைத் தடுக்க வேலிகட்டியாக

வேண்டும் என்ற முயற்சியே 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' கொடிபிடித்துச் செயல்படத் துவங்கியிருப்பது.

இந்த நாட்டில் உள்ள தலைவர்களில் பெரும்பாலானவர்கள் வறட்டுச் சூத்திரவாதிகளாகவே இருக்கிறார்கள். எந்தத் தத்துவத்தையும் முழுமையாகக் கற்று ஆராய்ந்து; அவற்றை, இந்த நாட்டின் பாரம்பரியத் தத்துவங்களோடு எப்படியெப்படி இணைப்பது என்று ஆராய்ந்து செயல்படத் துவங்கவில்லை. அதனால்தான், எத்தனை தத்துவங்கள் இத் திருநாட்டுக்கு வந்தாலும் அவையெல்லாம் செழிப்பாக வளர்ந்து காட்சிப் பொருள்களாக ஆகிடுகின்றனவே தவிர வேறு பயன் எதனையும் நல்க முடியாதனவாக ஆகிவிடுகின்றன. எனவேதான், இந்தியத் துணைக்கண்டத்தின் பூர்வீகக் குடிகளான தமிழர்கள் வளர்த்து வரும் தத்துவ வித்துக்களை மீண்டும் எங்கும் விதைத்து முளைத்துக் கிளைத்துச் செழித்து வளரச் செய்யும் முயற்சி இ.ம.இ.யின் மூலம் எடுக்கப் பட்டிருக்கிறது.

இந்த நாட்டின் பொதுமக்களிடம் தொன்றுதொட்டு வரக்கூடிய பழம்பெரும் தத்துவங்களோடு ஒத்துப் போகக் கூடிய ஒரு புதிய தத்துவத்தைக் கூறிப் புரட்சிக்கு வழிவகை செய்தால்தான் ஏதாவது உருப்படியான பயன் ஏற்படும். அதைச் செய்வதற்கு இளைஞர் சமுதாயத்தைத்தான் தயாரிக்க வேண்டும். இளைஞர்களின் சிந்தையும் நெஞ்சமும் எழுதப்படாத வெள்ளைத் தாள்களைப் போன்றவை. அதனால், முதன்முதல் எழுதப்படும் எழுத்துக்களே நீங்காத வடிவமைப்பைப் பெற்றிடும் என்பது தெளிவு. இதனை எண்ணித்தான் இளைஞர் சமுதாயத்திடம் மொழிப்பற்று, இனப்பற்று, நாட்டுப்பற்று எனும் முக்கோணக் கோட்டை கட்டி அருளாட்சி அமைக்கும் பெருமுயற்சி துவக்கப் பட்டிருக்கிறது. தமிழர்கள், 'தங்களின் மொழிகாத்து வைத்திருக்கும் தத்துவங்களே இந்தியத் துணைக்கண்டத்தையும்; இம்மண்ணுலகையும் நிலையான சமத்துவச் சகோதரத் தத்துவப் பொதுவுடமைக் கூட்டுறவுச் சமுதாயம் பெற்று நல்வாழ்வு வாழச் செய்யும்' என்ற பேருண்மையினை உணர்ந்தால் போதும்; அதுவே, அருளாட்சியை விரைவில் உருவாக்கித் தந்திடும். அதற்காகவே, இ.ம.இ. கொள்கை விளக்கம் முதன்முதலாக அமிழ்தினுமினிய பைந்தமிழில் வெளியிடப்படுகின்றது. அடுத்து, எல்லா இந்திய மொழிகளிலும் வெளியிடப்படும்.

தெரியாமை, புரியாமை, அறியாமை, இயலாமை, ... முதலியவை மிகுந்துள்ளதாகக் கருதப்படும் மதத்துறையில் அனைத்தையும் தெரிய, புரிய, அறிய, ஆராய, உணர, செயலுக்கு இயன்றதாக ஆக்கிடச் சித்தர்நெறியால்தான் முடியும். இந்தச் சித்தர்நெறி ஆரம்பம் முதல் வளர்ந்த வரலாறும், வாழ்வும், சாதனையும் தமிழ்மொழியில்தான் இருக்கின்றன. அவை மிகச் சிறந்த இலக்கியங்களாக, கலைச்செல்வங்களாக, கருத்துக் கருவூலங்களாக, சமய சமுதாய அரசியல் தத்துவங்களாக, பொருளாதாரக் கொள்கைகளாக விளங்குகின்றன. எனவே, ஒவ்வொரு தமிழரும் சித்தர்களின் படைப்புக்களை நிலைத்த வடிவில் புத்தகங்களாக உருவாக்கவும், குருகுலக் கல்விகளாகப் புதுவாழ்வு பெறவும் செய்தல் வேண்டும். இதற்கு இந்து மறுமலர்ச்சி இயக்கம் வளர்ச்சியும், ஆட்சியும் பெறுமாறு செய்தலே வழி.

மேனாட்டு விஞ்ஞானச் சாதனைகள் மக்களின் புறவாழ்வை வசதியாக்கப் பயன்படுவன போல்; சித்தர்களின் மெய்ஞ்ஞானச் சாதனைகள் மக்களின் அகவாழ்வை வசதியும், வளமும், அமைதியும், நிம்மதியும், நிறைவும், அன்பும், கனிவும், இனிமையும், பயனும் உடையதாகச் செய்திடும். எனவே, இந்து மறுமலர்ச்சி இயக்கம் உலக மக்களின் நல்வாழ்வுக்கு வழி செய்யக் கூடிய ஓர் ஒப்புயர்வற்ற **‘பண்பாட்டு இயக்கம்’** என்பது மிகத் தெளிவாக விளக்கப் படுகிறது.

இம்மாபெரும் பண்பாட்டு இயக்கம், முதலில் தமிழர்களை ஒற்றுமைப்படுத்தி, இனப்பற்றும், நாட்டுப்பற்றும், மொழிப்பற்றும், சமத்துவ உணர்வும், சகோதரத் தத்துவ உணர்வும், பண்பாட்டுப் பற்றும், நாகரிகப் பிடிப்பும், உலகந் தழுவிய சமாதானச் சமத்துவ உறவுமுறைச் சமுதாய நோக்கும், மானுடவியலுக்குரிய மென்மையுணர்வு விருப்பும், கலையார்வமும், அகில உலக ஆன்மநேய ஒருமைப்பாட்டு நோக்கும், உலகச் சமயச் சமத்துவ இணைப்புப் போக்கும் ... உடையவர்களாக உருவாக்கிடும் பணியோடு இந்தியத் துணைக்கண்டம் முழுதும் ‘சமுதாய மாற்றம்’ [Social Change] விளைவிக்கும் பணியையும் ஒரே சமயத்தில் நிறைவேற்றும். ஏனென்றால், ‘சமுதாய மாற்றமே நாட்டிலுள்ள அனைத்துக் கேடுகளையும் ஏமாற்றங்களையும் அகற்றும்’ [Only the Social Change can eradicate all the Evils and Disappointments of the Nation] என்பதே

சித்தர்களின் தெளிந்த உயிர்நாடித் தத்துவம். இத் தத்துவத்தை நிறைவேற்றுவதே இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் கொள்கை, குறிக்கோள், கோட்பாடு....

பல்வேறு நிலை ஆதரவாளர்களும், விருப்பாளர்களும், பற்றுளர்களும், அடியான்களும், அடியாள்களும், அடியார்களும் ... 'இ.ம.இ.யின் கொள்கை விளக்கம்' எனும் கட்டுரையைப் படித்ததும் எழுப்பிய வினாக்களுக்கு விடை தரும் பொருட்டே இவ்வளவு பெரிய பதிப்புரையை எழுத நேரிட்டு விட்டது. 'இந்து மறுமலர்ச்சி இயக்கம்' படித்தவர்கள் மிகமிகக் குறைவாக உள்ள இந்த நாட்டில்; படிப்பறிவில்லாத அப்பாவி மக்களின் பெருந்திரளைத் திரட்டியே எல்லாவித மறுமலர்ச்சிப் பணிகளையும் செய்ய வேண்டும் என்பதே எமது நோக்கம். ஏனெனில், இன்றைக்குப் 'படித்தவர்கள் கூட்டம் [the Educated Mob] என்றிருப்பவர்கள் பெரும்பாலும் கோழைகளாகவும், தன்னலவெறியர்களாகவும், மிகமிகக் குறுகிய நோக்கமுடையவர்களாகவும், அடிமை நெஞ்சும், கூலிக்காரச் சிந்தையும் உடையவர்களாகவே இருக்கிறார்கள்.

என் தந்தை ['... the educated mob possess slavish mentality and selfish thinking; it will never support any attempt for Social Change -. This is always seeking its master and it is ever ready to do sincere and obedient service under any Master. That is to say, this mob is only a mob of Coolies.... The educational system is such that only to create servants, slaves, cowards, culprits and corruptive silly-minded people ... taken from the writings of Mr M.Palaniswamy] படித்த கூட்டத்தைக் கடுமையாக விமர்சிக்கிறார். அது, அவருடைய படித்த நண்பர்களும்; அவரால் படிக்க வைக்கப்பட்ட தொண்டர்களும், அவருக்களித்த ஏமாற்றத்தால் கூட இருக்கலாம். எனவேதான், நான் எனது படைப்புக்களில் ஆங்காங்கே என் தந்தையின் ஒருசில வாசகங்களை மட்டுமே குறிக்கிறேன்;

'இந்த நாட்டின் படித்த கூட்டம் அடிமைப்புத்தியும், தன்னல உணர்வும் மிகுதியாக உடையது. இது, எந்தவிதச் சமுதாய மாற்ற முயற்சிக்கும் உதவி செய்யவே செய்யாது. இது, எப்போதுமே தன்னுடைய எசமானனைத்

தேடியே அலையும். அதாவது, இந்தப் படித்த கூட்டம் எப்போதுமே நன்றியும் கீழ்ப்பணிதலும் உண்மையுமுள்ள அடிமையாக வேலை செய்யக் காத்துக் கிடக்கிறது. சுருக்கமாகச் சொன்னால் இந்நாட்டின் படித்த கூட்டம் கூலிக்காரனாக வாழத் தயாராக இருக்கிறது. இந்த நாட்டுக் கல்வித்திட்டம் வேலைக்காரர்களை, அடிமைகளை, கோழைகளை, குற்றவாளிகளை, ஊழல் புரியும் அற்பப் பண்புடையவர்களை ... உருவாக்குவதாகவே இருக்கின்றது....' என்றிப்படிக் கடுமையாக என் தந்தை விமர்சிக்கிற அளவு இந்நாட்டின் கல்வித் திட்டமும், படித்தவர்களும் இல்லை.

ஆனால், "மிகமிகக் குறைந்த எண்ணிக்கையுடைய படித்தவர்கள் இவர்களை விடப் பல பதின்மடங்கு எண்ணிக்கையுடைய படியாதவர்களை ஏமாற்றிச் சுரண்டி உண்டு வாழும் ஆட்சிமுறையை வெறுக்கவே நேரிடுகிறது. பொருள்களை உற்பத்தி செய்யும் படிக்காதவர்களை 'வங்கி', 'வாணிபமுறை', 'அரசியல் சட்டம்' ... முதலியவைகள் மூலம் பகற்கொள்ளை அடிப்பதை மறைக்க முடியாது, மறுக்க முடியாது...." என்று என் தந்தை கூறிடும் கருத்துக்கள் சிந்தனையை உலைக்களமாக்குகின்றன. எனவேதான், 'இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் வரலாறு' என்ற நூலில் இந்த இயக்கத்தை உருவாக்கிய சித்தர் ஏளனம்பட்டியார்; அவருக்கடுத்து இயக்கத் தலைமையை ஏற்ற என் தந்தை சித்தர் காகபுசுண்டர்; அவருக்குப் பின் இந்த இயக்கத் தலைமையேற்று உலகுக்கு இதனை அறிமுகப்படுத்தும் நான் ஆக மூன்று பேரும் சாதித்துள்ள சாதனைகளைக் காலக் கணக்கீட்டு அடிப்படையில் முழுமையான வரலாறாக வெளியிட்டுள்ளேன். இவ் வரலாறுகள் தமிழ்மொழி, தமிழினம், தமிழ்நாடு, உலக மதங்கள், உலக அரசுகள், உலகச் சமூகங்கள், உலகக் கலைகள், உலக அறிவியல்கள், ... முதலியவற்றிற்குப் பெருஞ்செல்வங்களாகிடும். அதனால், அவற்றை யெல்லாம் அச்சிட்டுப் பலதொகுதிகளாக வெளியிட்டிடப் பலரின் ஆதரவுகளையும், ஏந்துகளையும் [உதவிகள்] வரவேற்றுச் செயல்படக் காத்திருக்கிறது இந்து மறுமலர்ச்சி இயக்கம் என்ற கருத்தைத் தெரிவித்து இப்பதிப்புரையை நிறைவு செய்கிறேன்.

இந்த நூற்றாண்டின் முற்பகுதியில் முளைவிட்டுச் செழித்துக் கிளைத்து வளர ஆரம்பித்த மொழியார்வம், இனப்பற்று, நாட்டுப்பற்று, கலையார்வம்,

அறிவியல் ஆர்வம் ... முதலிய அனைத்துமே முறையாகத் தனிமனித வாழ்வுக்கும், குடும்ப வாழ்வுக்கும் நிறைய நன்மைகளை வழங்கியிருக்க வேண்டும். அவற்றின் மூலம் மாபெரும் சமுதாய மாற்றம் உருவாகி அரசியல் சமத்துவம், சகோதரத் தத்துவம், பொதுவுடமை, கூட்டுறவு, சமாதானம், அமைதி, நிறைவு, ஒற்றுமை, ... முதலியவை விளைந்திருக்க வேண்டும். ஆனால், பொழுதுபோக்கு மனம் கொண்ட அரசியல்வாதிகள் எல்லா வளர்ச்சிகளையும் தங்களுடைய தனிமனித வளர்ச்சிக்கு இரையாக்கி அழித்து விட்டார்கள். அத்துடன் இத்திருநாட்டு வாழ்வியலுக்கு அடிப்படையான சமயத் துறையைக் கேலிக்கும், கிண்டலுக்கும், மடமைக்கும் உரியதாக விளம்பரம் செய்து பயித்தியக்கார வாழ்வு வாழ்ந்திட்டனர். இவற்றை யெல்லாம் ஈடு செய்யவே இந்த நூற்றாண்டின் பிற்பகுதியில் இந்து மறுமலர்ச்சி இயக்கம் செயல்பட வெளிப்பட்டிருக்கின்றது. யாம் எழுதியுள்ள **'இருபதாம் நூற்றாண்டுச் சிந்தனைகள்'** என்ற நூற்றொகுதி [The Twentieth Century's Thinking (in Volumes)] இந்தியாவையும், தமிழகத்தையும் பற்றிய முழுமையான வரலாற்று நூல்களாகும் என்ற செய்தியுடன் இப்பதிப்புரையை நிறைவு செய்கிறேன்.

**'இந்த நாட்டின் பதிப்பகத் துறை முழுக்க முழுக்க வணிக நோக்கோடு செயல்படுவது மாறினால்தான் இந்நாட்டில் உண்மையான நன்மைகள் விளைந்திடும்'** என்று என் தந்தை கூறிய கருத்தை இறுதிக் கருத்தாக இப்பதிப்புரையில் குறிப்பதை என் கடமையாகக் கருதுகிறேன்.

யாவும் நலமாகட்டும்!

ஓம் திருச்சிற்றம்பலம்

**அன்பு**

**ஞாலகுரு, ஞானகுரு, அரசயோகி, இராசிவட்ட நிறைவுடையார், ஆத்தாள் அமளிகை, கொற்றவை இருக்கை, பராசத்தி திருவடி, பன்னிரண்டாவது பதினெண்சித்தர் பீடாதிபதி, குருமகாசன்னிதானம், சித்தர் கருவூரார்**

**11-7-82**

# கௌரவத் தலைவர் தந்தை பெரியார் ஈ.வெ.ரா.விற்கு பாராட்டுரை

## [இந்து மறுமலர்ச்சி இயக்கத்திற்கு கௌரவத் தலைவரான தந்தை பெரியார் ஈ.வெ.ரா.விற்கு பாராட்டுரைகள்]

தமிழர்களின் தன்மான உணர்வைத் தூண்டிய பெரியார் ஈ.வெ.ரா.!

தமிழர்களின் மொழிப்பற்று உணர்வை எழுச்சி பெறச் செய்த பெரியார் ஈ.வெ.ரா.!

தமிழர்களின் இன ஒற்றுமை உணர்வை செழுச்சி பெறச் செய்த பெரியார் ஈ.வெ.ரா.!



தமிழர்களின் நாட்டுரிமை உணர்வை மறுமலர்ச்சி பெறச் செய்த பெரியார் ஈ.வெ.ரா.!

தமிழர்களின் மதச்சிந்தனையைப் புத்துணர்வு பெறச் செய்த பெரியார் ஈ.வெ.ரா.!

தமிழர்களைப் பண்பாட்டுப் புரட்சிக்குத் தயார் செய்த பெரியார் ஈ.வெ.ரா.!

தமிழ் மொழியை அருட்சினை மொழியாக்கிய பெரியார் ஈ.வெ.ரா.!

தமிழர்களிடையே இருந்த கூலி, போலி அரசியல் உணர்வுகளை ஒழித்த பெரியார் ஈ.வெ.ரா.!

உலகத் தமிழர்களை ஒன்று திரட்டும் மாபெரும் புரட்சியைத் துவக்கிய பெரியார் ஈ.வெ.ரா.!

தமிழின உரிமைக்கும் பெருமைக்கும் போராடிய பெரியார் ஈ.வெ.ரா.!

கடைசித் தமிழன் உள்ளவரை தனக்கு நன்றி செலுத்தும்படித் தொண்டாற்றிய பெரியார் ஈ.வெ.ரா.!

இவ்வாறு தமிழ்மொழி, இனம், நாடு இவற்றுக்குத் தொண்டாற்றிய பகுத்தறிவுப் பகலவன், சிந்தனைச் சிற்பி, தன்னலமில்லாது தொண்டாற்றிய மாவீரர், சிறைக்கஞ்சாச் சிங்கம், வெண்தாடி வேந்தர், அறிவுலக மாமேதை, தமிழினத் தந்தை பெரியார் ஈ.வெ.ரா.வின் கனவுகள் நனவாக்கப் பகுத்தறிவு வழி மதப் புரட்சியும், மதவழிச் சமுதாயப் புரட்சியும் உருவாக்கும் போராற்றலும், நெடிய, பெரிய, இடையீடற்ற பாரம்பரியமும் உடைய இந்து மறுமலர்ச்சி இயக்கத்தை அனைவரும் உணர்ந்து, ஒன்று திரண்டு ஒற்றுமைப்பட்டால்தான் ஒருமைப்பாட்டின் கரு வளர்ந்து முழுமை பெற்று நற்பிறப்பு ஏற்பட்டிடும். இ.ம.இ. கருஞ்சட்டையிலும், அ.வி.தி. செஞ்சட்டையிலும் செயல்படட்டும்.

**தலைவர், இந்து மறுமலர்ச்சி இயக்கம்**

# பெரியார் ஈ.வெ.ரா.வின் தத்துவம், சித்தாந்தம், கொள்கை, குறிக்கோள் முதலியவைகளையும் அடிப்படையாகக் கொண்ட இந்து மறுமலர்ச்சி இயக்கத்தின் முழக்கங்கள்.

## I

தமிழர்களைத் தமிழர்களென்று உணரச் செய்த பெரியாரின் தத்துவம் வளரட்டும்!

தமிழர்களுக்கு மொழிவழி இன உணர்வூட்டிய பெரியாரின் தத்துவம் வளரட்டும்!

தமிழர்களுக்கு மொழிப்பற்றையும், பாசத்தையும் தந்த பெரியாரின் தத்துவம் வளரட்டும்!

தமிழர்கள் மொழியுரிமைப் போருக்குத் தயாரித்த பெரியாரின் தத்துவம் வளரட்டும்!

தமிழர்களை மொழிவள வளர்ச்சிப் பணியில் ஈடுபடுத்திய பெரியாரின் தத்துவம் வளரட்டும்!

தமிழர்களை இனஒற்றுமை முயற்சியில் ஈடுபடுத்திய பெரியாரின் தத்துவம் வளரட்டும்!

தமிழர்களைச் சாதி, மத, மொழி வேறுபாடு கடந்து ஒருமைப்பாடு பெறச்செய்த பெரியாரின் தத்துவம் வளரட்டும்!

## II

தமிழினத் தலைவர் தந்தை பெரியாரின் கொள்கை வாழ்க!

தமிழினத் தலைவர் தந்தை பெரியாரின் குறிக்கோள் வாழ்க!

தமிழினத் தலைவர் தந்தை பெரியாரின் தத்துவம் வாழ்க!

தமிழினத் தலைவர் தந்தை பெரியாரின் சித்தாந்தம் வாழ்க!

III

வெண்தாடி வேந்தர் பெரியாரின் நெறிமுறைகள் வெல்க!

வெண்தாடி வேந்தர் பெரியாரின் செயல்மறைகள் வெல்க!

வெண்தாடி வேந்தர் பெரியாரின் சமய வேதாந்தங்கள் வெல்க!

வெண்தாடி வேந்தர் பெரியாரின் சமுதாயக் கோட்பாடுகள் வெல்க!

வெண்தாடி வேந்தர் பெரியாரின் அரசியல் அணுகுமுறை ஞானம் வெல்க!

வெண்தாடி வேந்தர் பெரியாரின் வாழ்வியல் அறிவுரைகள் வெல்க!

IV

பெரியார் ஈ.வே.ரா. ஊட்டிய தன்னம்பிக்கை யுணர்வு வளர்க! செழித்திடுக!

பெரியார் ஈ.வே.ரா. ஆற்றிய பகுத்தறிவுப் பணிகள் வளர்க! செழித்திடுக!

பெரியார் ஈ.வெ.ரா. தோற்றுவித்த சமய சமுதாய அரசியல் சிந்தனைகள் வளர்க! செழித்திடுக!

பெரியார் ஈ.வெ.ரா. மறுமலர்ச்சி செய்த தமிழ் உணர்ச்சி வளர்க! செழித்திடுக!

பெரியார் ஈ.வெ.ரா. புத்துணர்வூட்டிய தமிழின ஒற்றுமை வளர்க! செழித்திடுக!

பெரியார் ஈ.வெ.ரா. திட்டமிட்டு வலிமைப்படுத்திய தமிழ்நாட்டுப் பற்று வளர்க! செழித்திடுக!

பெரியார் ஈ.வெ.ரா. கிளர்ச்சி பெறச் செய்த தமிழன் என்ற உணர்ச்சி வளர்க! செழித்திடுக!

பெரியார் ஈ.வெ.ரா. கிளர்ச்சி பெறச் செய்த தன்மானப் போராட்டம் வளர்க! செழித்திடுக!

பெரியார் ஈ.வெ.ரா. கிளர்ச்சி பெறச் செய்த தமிழுரிமைப் போராட்டம் வளர்க! செழித்திடுக!

பெரியார் ஈ.வெ.ரா. கிளர்ச்சி பெறச் செய்த தமிழின விடுதலைப் போராட்டம் வளர்க! செழித்திடுக!

V

பெரியார் ஈ.வெ.ரா. விழிச்சி பெறச் செய்த கருத்துப் புரட்சி வளமுறுக! வலிமை பெறுக!

பெரியார் ஈ.வெ.ரா. விழிச்சி பெறச் செய்த எண்ணப் புரட்சி வளமுறுக! வலிமை பெறுக!

பெரியார் ஈ.வெ.ரா. விழிச்சி பெறச் செய்த சிந்தனைப் புரட்சி வளமுறுக! வலிமை பெறுக!

பெரியார் ஈ.வெ.ரா. விழிச்சி பெறச் செய்த தனிமனித வாழ்வுப் புரட்சி வளமுறுக! வலிமை பெறுக!

பெரியார் ஈ.வெ.ரா. விழிச்சி பெறச் செய்த குடும்ப வாழ்வுப் புரட்சி வளமுறுக! வலிமை பெறுக!

பெரியார் ஈ.வெ.ரா. விழிச்சி பெறச் செய்த சமுதாயப் புரட்சி வளமுறுக! வலிமை பெறுக!

பெரியார் ஈ.வெ.ரா. விழிச்சி பெறச் செய்த சமயப் புரட்சி வளமுறுக! வலிமை பெறுக!

VI

பெரியார் ஈ.வெ.ரா. விழிச்சி பெறச் செய்த அரசியல் புரட்சி வளர்க! வலிமை பெறுக!

பெரியார் ஈ.வெ.ரா. விழிச்சி பெறச் செய்த தன்மான உணர்வுப் புரட்சி வளர்க! வலிமை பெறுக!

பெரியார் ஈ.வெ.ரா. விழிச்சி பெறச் செய்த தன்னம்பிக்கை யுணர்வுப் புரட்சி வளர்க! வலிமை பெறுக!

பெரியார் ஈ.வெ.ரா. விழிச்சி பெறச் செய்த கலையுணர்வுப் புரட்சி வளர்க! வலிமை பெறுக!

பெரியார் ஈ.வெ.ரா. விழிச்சி பெறச் செய்த இலக்கிய உணர்வுப் புரட்சி வளர்க! வலிமை பெறுக!

பெரியார் ஈ.வெ.ரா. விழிச்சி பெறச் செய்த மொழியுணர்வுப் புரட்சி வளர்க! வலிமை பெறுக!

பெரியார் ஈ.வெ.ரா. விழிச்சி பெறச் செய்த இனவுணர்வுப் புரட்சி வளர்க! வலிமை பெறுக!

## VII

தமிழர்களைத் தமிழர்களாக்கப் பெரியார் ஈ.வெ.ரா. துவக்கிய பணிகள் தொடரட்டும்! தொடரட்டும்!

தமிழர்களின் தன்மானம் பிழைக்கப் பெரியார் ஈ.வெ.ரா. துவக்கிய பணிகள் தொடரட்டும்! தொடரட்டும்!

தமிழர்களின் தன்னம்பிக்கை தழைக்கப் பெரியார் ஈ.வெ.ரா. துவக்கிய பணிகள் தொடரட்டும்! தொடரட்டும்!

தமிழ்மொழி உரிமை பெற்றிடப் பெரியார் ஈ.வெ.ரா. துவக்கிய பணிகள் தொடரட்டும்! தொடரட்டும்!

தமிழின விடுதலை பெற்றிடப் பெரியார் ஈ.வெ.ரா. துவக்கிய பணிகள் தொடரட்டும்! தொடரட்டும்!

தமிழினத்தின் போலிநெஞ்சை மாற்றிடப் பெரியார் ஈ.வெ.ரா. துவக்கிய பணிகள் தொடரட்டும்! தொடரட்டும்!

தமிழினத்தின் கூலிச் சிந்தையை மாற்றிடப் பெரியார் ஈ.வெ.ரா. துவக்கிய பணிகள் தொடரட்டும்! தொடரட்டும்!

தமிழினத்தின் அடிமையுணர்வை மாற்றிடப் பெரியார் ஈ.வெ.ரா. துவக்கிய பணிகள் தொடரட்டும்! தொடரட்டும்!

தமிழினத்தின் ஒற்றுமையற்ற உணர்வுகளை மாற்றிடப் பெரியார் ஈ.வெ.ரா. துவக்கிய பணிகள் தொடரட்டும்! தொடரட்டும்!

தமிழினத்தின் கோழையுணர்வை மாற்றிடப் பெரியார் ஈ.வெ.ரா. துவக்கிய பணிகள் தொடரட்டும்! தொடரட்டும்!

**குறிப்பு:**- இம் முழக்கங்கள் 1984ஆம் வருடத்திய சிவப்பு டைரியிலிருந்து (Indian Overseas Bank) 28.6.1984 அன்று எழுதப் பட்டவை.

//உண்மை நகல்//

//இதன் மூலநகல்: கும்மிடிபூண்டி சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கையெழுத்தில் இருந்தது. இந்த நகல் கும்மிடிபூண்டி சித்தரடியார் திரு ஏ.இரவி அவர்களின் கோப்புகளிலிருந்து கிடைத்தது.

இந்தக் கட்டுரையின் ஒரு பகுதி குருதேவர் அறிக்கை 7இல் வெளியிடப் பட்டுள்ளது./ /

# உங்களின் சிந்தனைக்கு ...

... 'தமிழ் வாழ்க' என்று சொல்லுபவர் யாராக இருந்தாலும் அவர் நாத்திகராக, கடவுள் வெறுப்பாளராக, மதமறுப்பாளர்க்ளாக, ஆன்மீக உலகின் எதிரியாகவே இருப்பார்! இருக்க வேண்டும்! இருக்க முடியும்!! என்ற கருத்தோட்டமே பெரும்பாலான தமிழர்களுக்கிடையில் வளமாகவும், வலிமையாகவும் இருக்கின்றது! இருக்கின்றது!! இருக்கின்றது!!! எனவேதான், தமிழ்மொழியின் பெயராலோ! அல்லது தமிழ்மொழி வழிப்பட்ட தமிழினத்தின் பெயராலோ செய்யப்படக் கூடிய எந்தச் செயலும் நாடு தழுவிய ஆதரவைப் பெற முடியாத நிலையே தொடர்ந்து நீடித்து வருகின்றது.

இப்படிப்பட்ட அவலக் கேவல நிலைமைக்கு முடிவு கட்டத்தான், இன்றைக்குப் பதினெண் சித்தர் மடாதிபதி **'தமிழும், இந்துவேதமும் இந்துமதமும் பிரிக்க முடியாதவை', 'இந்துவேதமும் இந்துமதமும் தமிழ் மொழியில்தான் பிறப்பெடுத்தன', 'இந்துவேதத்தையும், இந்து மதத்தையும் தமிழ்மொழி மூலமாகத்தான் தெரிய, அறிய, ஆராய, புரிய, பயன்படுத்திப் பயனடைய முடியும்! முடியும்!! முடியும்!!!'** என்ற பேருண்மைகளை விளக்கப் புறப்பட்டிருக்கின்றார். ...

## இந்து இலக்கியக் கழகத்தின் பிற வெளியீடுகளையும் வாங்கிப் படியுங்கள்.

| | | |
|---|---|---|
| 1) | மனிதரைக் கடவுளாக்கும் பூசைமொழி | ரூ.108/- |
| 2) | இந்துவேதம் தரும் பூசைமொழி, பூசைமுறைகள் | ரூ. 5/- |
| 3) | எந்த மானுடம் இந்த மானுடம் | ரூ.18/- |
| 4) | சிந்திக்கலாமா? | ரூ.36/- |
| 5) | இருக்கு வேதத்தில் பெருமால் காயந்திரிகள் | ரூ.50/- |

## இவ்வெளியீடுகள் வேண்டுவோர் தொடர்பு கொள்ள வேண்டிய முகவரி:

1) சித்தரடியான் திரு கார்த்திக் சிவராமன், கிழக்கு தாம்பரம், சென்னை, 9972130609
2) சித்தரடியான் திரு வீரபாண்டி, மதுரை, 9994983391
3) சித்தரடியான் திரு சங்கிலி கருப்பசாமி, திருச்சுழி 9655017508
4) சித்தரடியான் திரு மோகனரங்கம், திருவொற்றியூர், சென்னை 9840670874
5) சித்தரடியான் திரு சந்திரன், புன்னப்பாக்கம், வெங்கல், 9943670235
6) சித்தரடியார் திரு இரமணு, ஆரணி, 9629450166

**11வது ஞானாச்சாரியார், தஞ்சைப் பெரிய கோயிலைக் கட்டிய சித்தர் காவிரியாற்றங்கரைக் கருவூரார்.**



இவரே தமிழின மொழி மத விடுதலை இயக்கத் தலைவராகவும், இந்துவேத நாயகமாகவும் செயல்பட்டுத் தமிழினத்தின் இந்துமத அருட்பேரரசான பிற்காலச் சோழப் பேரரசை (கி.பி.785 - 1279) உருவாக்கினார்.

இவருக்கு அடுத்துப் பீடாதிபதியாகப் பட்டமேற்ற 12வது ஞானாச்சாரியார் ஞாலகுரு சித்தர் அரசயோகிக் கருவூரார் அவர்களின் எழுத்துக் குவியல்களிலிருந்து சிலவற்றை இந்தச் சுற்றறிக்கையின் மூலம் வழங்குகின்றோம்.

---

செந்தமிழ் மொழியில் உள்ள இந்துவேதம்தான் அனைத்துச் சமய சமுதாய அரசியல் சீர்கேடுகளையும் சரிப் படுத்தும்.

செந்தமிழ் மொழியில் உள்ள இந்துவேத வாழ்வே மணிசரை மனிதராக்கும்.



அம்மையப்பர்

---

Published on behalf of His Holiness 12th Pathinensiddhar Peedam, Gurudevar, Gnaalaguru Siddhar Arasayogi Karuvooraar by the Indhu Ilakkiya Kazhagam (இந்து இலக்கியக் கழகம்).
Published by Mr Sivaraman, Kamarajarpuram, East Tambaram. Cell: 09972130609.
Printed at Kavin Printers, Madurai.

www.gurudevar.org Email: indhuism@gmail.com